# ரூஹா சுவாச காற்று

காற்று 13 செப்டம்பர் 2023 சுவாசம் 10
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-



# இதயம் திறந்து உங்களுடன்...



அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், உங்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் சுகமாயிருக்கிறீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன். உங்களுக்காக நாங்கள் தினமும் ஜெபிக்கிறோம்.

கடந்த மாதம் இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா தேசத்தில் ஊழியத்தை நிறைவேற்ற தேவன் அடியேனுக்கு கிருபை செய்தார். அங்குள்ள சபைகளில் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு, அந்த தேசத்தின் எழுப்புதலுக்காக, திருச்சபைகளில் உயிர்மீட்சிக்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. ஒவ்வொரு கூட்டங்களிலும் ஜனங்கள் ஆவியானவரின் தொடுதலையும், அற்புத சுகத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொண்டனர். அமெரிக்கா தேசத்தின் எழுப்புதலுக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இந்த செப்டம்பர் மாதம் எபிரேய காலண்டரின்படி புதிய வருடம் (5784) ஆரம்பமாகிறது. இந்த வருடம் திறந்த வாசலின் வருடமாக பிரகடனப்படுத்தப்படுகிறது. புறஜாதிகளும் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்ளுவதற்கான சுவிசேஷ வாசல்கள் திறக்கப்படுகின்ற காலம் இது. ஆகவே "திறவுண்ட வாசல் அடைபடுமுன்" மிகத் தீவிரமாக சுவிசேஷத்தை அறிவிக்கவும், சந்திக்கப்படாத மக்கள் இனங்களை சந்திக்கவும் ரூஹா ஊழியங்கள் செயல்பட்டு வருகிறது. விசேஷமாக ரூஹா தொலைக் காட்சி ஊழியங்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல இலட்சங் களைச் செலவு செய்து இயேசுவை அறியாத ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவித்து வருகிறோம்.

## எழுப்புதலுக்காக ஜெபிக்கிறீர்களா?

வேதாகமத்தில் சொல்லியிருக்கிற கடைசி காலத்திற்குரிய அடை யாளங்களை நாம் ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டும் கண்டும் வருகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார். அதற்கு முன்பாக உள்ள "**கடைசி கால எழுப்புதலுக்காக**" நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? அதற்காக தினமும் ஜெபிக்கிறீர்களா? **கர்த்தர் வெகு சீக்கிரத்தில் நம்முடைய இந்திய தேசத்தில் எழுப்பு தலை அனுப்பப்போகிறார். எழுப்புதலை வேடிக்கை பார்ப்பதற் காக அல்ல, எழுப்புதலில் பங்கு கொள்வதற்காக கர்த்தர் உங் களை அழைக்கிறார்.** கர்த்தர் உங்கள் மேல் வைத்த பொறுப்பு களை உணர்ந்து செயல்படுங்கள். உங்கள் குடும்பத்தையும் பிள்ளை களையும் எழுப்புதலுக்காக ஆயத்தப்படுத்துங்கள்.

**நம்முடைய ரூஹா ஊழியங்கள் எழுப்புதலுக்காக இரவும் பகலும் உழைத்துக்கொண்டிருக்கிறது. அதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறது. 24 மணிநேரமும் ஜெபம் மற்றும் துதி ஆராதனையை ஏறெடுப்பதற்காக "எழுப்புதல் ஜெப மையத்தை" வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். சீக்கிரத்தில் அதை வாங்குவதற்கு கர்த்தர் தேவைகளைக் சந்திக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.**

## நெசா ஊழியங்கள்

நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக கடந்த மாதங்களில் பள்ளிக்குச் செல்கின்ற ஏழை குழந்தைகளுக்கு பள்ளிப்பை, பள்ளி உபகரணங்களை சென்னை இராணி அண்ணா நகர், செங்கல் பட்டு, தாம்பரம் சேலையூரில் உள்ள **குடிசையில் வசிக்கிற சுமார் 200 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.** அதுமட்டுமல்லாது மாதந் தோறும் ஏழை விதவைகள், தாய்மார்களுக்கு அரிசி, மளிகை பொருட்கள் அடங்கிய **நெசா அற்புத பெட்டகமும்,** ஒவ்வொரு நாளும் சாலையோரத்தில் வசிக்கிற ஜனங்களுக்கு உணவு கொடுக்கப் பட்டு வருகிறது. இந்த நற்காரியங்களைச் செய்ய தங்கள் பொருளா தாரத்தினால் தாங்குகிற உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக! (படங்களுக்கு பக்கம் 14ஐப் பார்க்கவும்)

## இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றும் ப்ரீடம் செய்திகள்

கடந்த 2022ம் வருடம் சென்னையில் நடைபெற்ற ப்ரீடம் துதி ஆராதனை எழுப்புதல் பெருவிழாவில் கொடுக்கப்பட்ட மூன்று நாட்கள் செய்திகளை ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திரத்தினத்தன்று ரூஹா டிவியில் ஒளிபரப்ப கிருபை செய்தார். அந்த செய்தி தற் போது ரூஹா டிவி யூடியூப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட் டுள்ளது. **பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு, பாவத்தில் வாழ்ந்து கொண் டிருப்பவர்கள் பரிசுத்தராகிய இயேசுவை நோக்கி இழுக்கும் அன் பின் செய்தி. தான் யார் என்பதையும், கிறிஸ்துவின் அழைப்பை யும் மறந்து உலகத்திற்கு பின் அலைந்து கொண்டிருக்கும் வாலிபர் கள் தன்னுடைய Identityஐ கண்டுபிடிக்க உதவும் கர்த்தரு டைய வார்த்தை.** வாலிபர்களின் சிறப்பான நாடகத்தோடு இருக் கும் இந்த செய்திகளை நீங்களும் கேட்டு மற்றவர்களுக்கும் Linkஐ அனுப்புங்கள். கர்த்தருடைய ஆவியானவர் செய்தியைக் கேட்கிற ஒவ்வொருவரையும் விடுதலையாக்குவாராக!

எனக்காகவும், நம்முடைய ரூஹா ஊழியக் குடும்பத்திற்காகவும், விசேஷமாக இந்த செப்டம்பர் மாதத்திலும் செய்து முடிக்க வேண் டிய எல்லா ஊழியங்களையும் தேவ சித்தத்தின்படியே ஜெயமாக செய்து முடிக்கத்தக்கதான கிருபைகளைக் கர்த்தர் எங்களுக்குத் தந்தருளவும், நன்றி பாடல்கள் நன்றாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு வெளியிடவும் தினமும் ஜெபியுங்கள்.

*கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!*

*அன்பும் ஜெபமும்*
**உங்கள் சகோதரன்**
**போதகர் ஆல்வின் தாமஸ்**



# இழந்ததைத் திரும்ப பெறுவீர்கள்

போதகர் ஆல்வின் தாமஸ்

பிரியமானவர்களே! இந்த மாதத்தில் தேவன் தருகிற தீர்க்கதரிசன வார்த்தை நீங்கள் இழந்ததை திரும்ப பெறுவீர்கள். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தங்களுடைய தவறுதல்களினாலோ அல்லது ஏமாற்றங்களினாலோ வாழ்வதற்கு தேவையான முக்கியமான காரியங்களை இழந்து அதைத் திரும்ப பெற முடியாமல் என்ன செய்வதென்று திகைத்துக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையின் முக்கியமான நேரங்களை வீணாக்கி தொலைத் திருக்கிறார்கள். திரும்பவும் அந்த நன்மைகள், ஆசீர்வாதங்கள் கிடைக்குமா? என்ற கேள்விக்குறியோடு அதைத் திரும்ப பெற ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்களும் ஆசீர்வாதங்களை இழந்து, திரும்ப அதைப் பெற்றுக் கொள்வேனா? என்ற கலக்கத்தோடு இருக்கிறீர்களா?

இந்த தீர்க்கதரிசன செய்தி உங்களுக்குத்தான். விசுவாசத்தோடு வாசியுங்கள். இழந்தவைகளைத் திரும்ப பெற்றுக்கொள்ள தேவன் உங்களுக்கு கிருபை செய்வாராக!

**அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டு வருவேன், அக்காலத்திலே உங்களைச்சேர்த்துக்கொள்ளுவேன், உங்கள் கண் காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமி யிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (செப்பனியா 3:20)**

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோனுக்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்டார்கள். எதிரி நாட்டு படைகள் இஸ்ரவேலர்களைத் தாக்கின தினால் சிதறடிக்கப்பட்டார்கள். சிறைப்படுத்தப்பட்டார்கள். அந்நிய தேசத்தில் சிறுமைப்படுத்தப்பட்டார்கள். மிகுந்த உபத்திரவத்தை அனுபவித்தார்கள். இந்த சூழ்நிலையில் தேவன் அவர்களின் விண்ணப்பத்தின் சத்தத்திற்கு செவி கொடுத்து, அவர்கள் வாழ்க்கையில் இழந்துபோன எல்லாவற்றையும் திரும்பத் தருவேன் என்று சொல்லி, ‘‘பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களை கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன்’’ என்று வாக்குத்தத் தங்களைக் கொடுத்தார்.

தேவன் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இழந்ததைத் திரும்ப தருவதற்கு முன்பாக ஒரு காரியத்தை செய்கிறார். அது என்ன வென்றால் உங்கள் சிறையிருப்பை மாற்றுகிறார். **முதலாவது உங்களை விடுதலையின் வாழ்விற்கு நேராக அழைத்துக்கொண்டு வந்த பின்பு இழந்ததைத் திரும்பத் தருகிறார்.**

இந்த உலகத்தின் அதிபதியான பிசாசானவன் ஜனங்களை பாவம் என்னும் சிறையிருப்பில் வைத்திருக்கிறான். பரிசுத்தமாக வாழ வேண்டியவர்கள், அசுத்தத்திற்கு தங்களை விற்றுப்போட்டு பாவத்தின் அடிமைத்தனத்திலிருக்கிறார்கள். தேவனுக்காக எழும்ப வேண்டியவர்கள் உலகத்தின் இச்சைகளுக்கு பின்பாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டியவர்கள், வேலைக்கும், பணத்திற்கும் முதலிடத்தையும் தங்கள் நேரத்தையும் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். மாய வலையை விரித்து பிசாசு அவர்களை தன் பக்கமாக இழுத்து சிறைக்கைதிகளாக்கி வைத்திருக்கிறான்.

நீங்கள் சிறையிருப்பில் இருக்கும்போது, தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் திட்டங்களையும் ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக்கொள்ள முடியாது. சிலருக்கு செல்போன் ஒரு பெரிய சிறையிருப்பாக இருக்கிறது. குறிப்பாக வாலிபர்கள் தேவையில்லாத காரியங்களுக்கு அதிகமாக உபயோகிக்கின்றனர். காலையில் எழுந்ததும் வேதத்தை வாசிக்காமல் சமூக வலைத்தளங்களில் அதிகமான நேரத்தை செலவிட்டு சிறை யிருப்பில் இருக்கின்றனர். அன்பானவர்களே, எப்படிப்பட்ட சிறை யிருப்பில் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும்.

நான் ஒரு வாலிப தம்பியை அறிவேன். அந்த வாலிபனுக்கு தான் தேவனுக்காக எதையாகிலும் சாதிக்க வேண்டும், வாழ்க்கை யில் முன்னேற வேண்டும் என்ற விருப்பமும் வாஞ்சையும் இருக் கிறது. ஆனால் சோம்பல் என்ற சிறையிருப்பினால் அவனால் எழும்ப முடியவில்லை. சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் சோம்பல் அவனைத் தடுத்துவிடுகிறது. இன்றைக்கும் அநேக வாலிபர்கள் இப்படிப்பட்ட சிறையிருப்பில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தேவன் உங்களை ஆசீர்வதிப்பதற்காகவும், இழந்தவை களை நீங்கள் திரும்ப பெற்றுக்கொள்வதற்காகவும் சிறையிருப்பி லிருந்து வெளியே தூக்கிவிட விரும்புகிறார். தெற்கத்தி வெள்ளங் களைத்திருப்புவதுபோல தேவன் உங்கள் சிறையிருப்பை திருப்பி விடுதலையைத் தரப்போகிறார். காரணம், குமரனாகிய இயேசு கிறிஸ்து விடுதலையாக்கினால் நீங்கள் மெய்யான விடுதலையைப் பெற்றுக்கொள்ளுவீர்கள். இன்னும் எத்தனை நாட்கள் நீங்கள் சிறைக்கைதிகளாகவே இருப்பீர்கள்? தேவன் தரும் சுதந் திரத்தைப் பெற்றுக்கொள்ள இன்றே உங்கள் வாழ்க்கையை அர்ப்பணி

யுங்கள். திருடனாகிய பிசாசு உங்கள் வாழ்க்கையில் திருடி வைத் திருக்கிற அனைத்துக்காரியங்களையும் மறுபடியும் பெற்றுக் கொள்ள சிறையிருப்பிலிருந்து வெளியே வாருங்கள்.

## எலியாசீப் திரும்ப தரும் தேவன்

“Arukah” என்பதற்கு மறுசீரமைப்பு என்று பொருள். அந்த மறுசீரமைப்பை உண்டாக்குகிற நம்முடைய தேவனுக்கு எலியாசீப் என்று பெயர். எல்(EL) என்றால் தேவன் என்றும், யாசீப்(Yashib) என்றால் திருப்பிக்கொள்ளுதல் என்றும் அர்த்தம்.

தேவன் உங்கள் வாழ்க்கையில் மறுசீரமைப்பைக் கொடுத்து, நீங்கள் இழந்துபோன சுகம், பொருளாதாரம், மேன்மைகளை மறுபடியும் கொடுத்து உங்களை ஆசீர்வதிக்கப்போகிறார்.

நம்முடைய தேவன் ஒவ்வொன்றையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர். அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர். ஆகவே உங்கள் வாழ்க்கையில் இழந்தைத் திரும்ப தருவதற்கு ஒரு அநுக்கிரக காலத்தை வைத்திருக்கிறார். இதுவே இந்த அநுக்கிர காலம். இந்த காலத்தில் நீங்கள் தேவனை நோக்கி செய்யும் விண்ணப்பங்களுக்கு அவர் பதில் தந்து, நீங்கள் இழந்த காரியத்தை திரும்பவும் பெற்றுக்கொள்ளும்படி செய்வார்.

## ஐசுவரியத்தைத் திரும்ப பெறுவீர்கள்

**கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார் (யோபு 42:10)**

யோபுவிற்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு ஏர்மாடுகளும், ஐந்நூறு கழுதைகளுமாகிய மிருக ஜீவன்கள் இருந்ததுமன்றி, திரளான பணிவிடைக்காரரும் இருந்தார்கள். மேலும் யோபு கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனா யிருந்தான். ஆனால் அவனுடைய ஐசுவரியங்கள் எல்லாம் ஒரே நாளில் அவனிடமிருந்து பறிக்கப்பட்டது. மாளிகையில் வாழ்ந்து வந்த யோபு மறுநாளிலே பிள்ளைகளையும் ஐசுவரியங்களையும் இழந்து ஒன்றுமில்லாதவனாய் நடுத்தெருவிற்கு வந்து விட்டான். உடம்பெல்லாம் கொடிய பருக்கள், வியாதியினால் ஓட்டை எடுத்து தேய்த்துக்கொண்டிருக்கும் அவல நிலை. யோபுவின் நண்பர்கள் வந்து, நீ தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறாய், ஆகவே தேவன் உன்னை தண்டித்திருக்கிறார் என்று அவனை மேன்மேலும் குற்றப்படுத்தினார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் யோபு, “தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன்” என்று சொன்னபோது தேவன் அவனுடைய நிலைமையை தலைகீழாக மாற்றினார். அவனுடைய சிறையிருப்பை நீக்கி, முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்கு தந்தார்.



யோபுவைப்போல அனைத்தையும் இழந்து ஒன்றுமில்லாமல் விசாரிப்பாரற்று இருக்கிறீர்களா? கடந்த நாட்களில் வியாபாரத் தில் ஏற்பட்ட நஷ்டத்தின் நிமித்தம் பொருளாதாரத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பணத்தை சிலர் ஏமாற்றி எடுத்துக் கொண்டதினால் மிகவும் பணபற்றாக்குறையினால் வேதனை ப்படுகிறீர்களா? அடகு கடையில் உள்ள நகைகள் திருப்ப முடியாமல் இருக்கிறீர்களா? ஒவ்வொரு மாதமும் வரவைக்காட்டிலும் செலவு அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறீர்களா? கலங்காதீர்கள். தேவன் நீங்கள் இழந்த ஐசுவரியத்தைத் திரும்ப பெற்றுத் தர வல்லவராயிருக்கிறார்.

யோபு தான் சிறையிருப்பில் இருந்தபோது, தேவனுக்கு விரோதமாக முறுமுறுக்கவில்லை. தன் நாவினால் பாவஞ் செய்யவில்லை. தேவன் தனக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மறுபடியுமாய் சரிகட்டுவார் என்று தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தார். ஆகவே தேவன் அவனுடைய சிறையிருப்பிலிருந்து விடுதலையாக்கி இழந்ததைத் திரும்பக் கொடுத்தார்.

அன்பானவர்களே, நம்முடைய தேவன் ஐசுவரிய சம்பன்னர். ஆகவே நீங்களும் இந்த உலகத்தில் ஐசுவரியவான்களாய் வாழ வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். பிசாசு உங்களுடைய பொருளாதார ஆசீர்வாதத்தை திருடி, நீங்கள் தரித்திரநிலைமைக்கு சென்று தேவனை மறுதலிக்க வேண்டும் என்று முயற்சிக்கிறான். ஆனால் இயேசுகிறிஸ்து உங்களுடைய தரித்திர நிலைமையை மாற்றுவதற்காக, இழந்த ஐசுவரியத்தை திருப்பி தருவதற்காக கல்வாரி சிலுவையில் அவர் உங்களுக்காக தரித்திரரானார். அவருடைய தரித்திரத்தின் மூலமாக நாம் ஐசுவரியவானாகிறோம்.

இந்த வசனத்தை ஒவ்வொருநாளும் அறிக்கையிடுங்கள். கர்த்தர் நீங்கள் இழந்த ஐசுவரியங்களை, பொருளாதார ஆசீர்வதங் களை திரும்ப கொடுத்து உங்களை ஆசீர்வதிப்பார்.

## ஆரோக்கியத்தைத் திரும்ப பெறுவீர்கள்

**அவர்கள் உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான்**

**உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்று வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 30:17)**

ஆரோக்கியம் என்றால் பழுதற்ற, பெலவீனமற்ற சரீரம். இந்த உடலில் ஏற்படுகிற வியாதியின் மூலமாக சிறுநீரகம் நுரையீரல் கல்லீரல் செயலிழப்பு, இருதயத்தில் அடைப்பு, நரம்புகளில் கோளாறு போன்ற பல வியாதிகளை Degenerative Disease என்றழைப்பார்கள். இந்த வியாதிகள் மிகுந்த பாதிப்பை சரீரத்திற்கு ஏற்படுத்திவிடாதபடிக்கு அதற்குரிய மருந்துகளைக் கொடுத்து நோயாளிகளை பராமரிக்க முடியுமே தவிர முழுவதுமாக பூரணமாக குணமாக்க முடியாது.

ஆனால் **நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மருத்துவர்களால் பூரணமாக குணமாக்க முடியாத வியாதிகளை, நீங்கள் இழந்த ஆரோக்கியத்தை திரும்ப தர வல்லவரா யிருக்கிறார். காரணம், அவர் யாவே ரொபேக்கா. அதற்கு நிரந்தர ஆரோக்கியத்தைத் தருபவர் என்று அர்த்தம்.** ஆம், உங்கள் வாழ்க்கையில் குணமாக்கவே முடியாது, வாழ்நாளெல்லாம் மருந்து மாத்திரைகளை உபயோகப்படுத்தவேண்டும் என்று சொன்ன மருத்துவரின் அறிக்கைகளை கிழித்து, நீங்கள் இழந்த பூரண ஆரோக்கியத்தைத் தருவது நிச்சயம்.

**அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரு டைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித் தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாருக்கிற தம்மு டைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8 :11)**

தேவன் தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிக்கப்போகிறார். Degenerative Cellலிருந்து Re-generative Cellஆக நம்முடைய சரீரத்தை மாற்றப்போகிறார். குஷ்ட ரோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் Degenerative Cellகளைக் காட்டி லும் அவருக்குள் காணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் Regenera tive Cellஆக மாற்றுவார் என்பதினால் இயேசு கிறிஸ்து அவர் களைத் தொட்டு சுகமாக்கினார்.

பெங்களூர் பட்டணத்தில் வசிக்கிற மேரி என்ற சகோதரிக்கு மருத்துவர்களால் கேன்சர் என்று உறுதிசெய்யப்பட்டது. Radio Therapy மூலமாக கேன்சர் கிருமியை அழித்து விடலாம் என்று அதற்கான முயற் சியை எடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் கேன்சர் கிருமி உடல் முழுவதும் பரவிவிட்டது. இனி எங்களால் ஒன்றும் செய்யமுடியாது, நீங்கள் வீட்டிற்கு அழைத்து கொண்டுபோங்கள் என்று உறவினர் களிடம் சொல்லிவிட்டார்கள். மரணத்தருவாயில் இருந்த அந்த சகோதரி ஒவ்வொருநாளும் ரூஹாடிவியில் ஒளிபரப்பப்படு கின்ற "அதிகாலையில் உம் திருமுகம் தேடி" நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டு வந்தார்கள். அந்த நிகழ்ச்சியின் இறுதி ஜெபத்தில் தன்னுடைய ஜெபக்குறிப்பை தெரியப்படுத்தினபோது அவர்களுக் காக இணைந்து ஜெபித்தோம். இழந்த சுகத்தை பூரணமாக பெற்றுக்கொள்ளுவீர்கள், கர்த்தர் உங்களுக்கு ஆரோக்கியத்தை வரப்பண்ணுவார் என்று ஆவியில் நிறைந்து தீர்க்கதரிசனம் உரைத் தேன். அவர்கள் கடைசியாக ஒருமுறை ஸ்கேன் எடுத்துப்பார்த்துவிட லாம் என்று ஸ்கேன் எடுத்துப்பார்த்தபோது அவர்களுக்கு கேன்சர் கிருமியும் கட்டியும் இருந்த இடம் தெரியமால் மறைந்தது. அதை உறுதிப்படுத்த மற்றொரு இடத்திற்கு சென்று ஸ்கேன் செய்த போது அதிலும் உங்களுக்கு கேன்சர் இல்லை என்றே வந்தது. **மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலைமையில்** 4th Stage **கேன்சரை குணமாக்கி தேவன் இழந்த சுகத்தையும் ஆரோக்கியத்தையும் திரும்பக் கொடுத்தார்.**

உங்களுக்கு ஏற்பட்ட வியாதியினால் மிகவும் வேதனைப்படு கிறீர்களா? இதிலிருந்து எனக்கு சுகம் கிடைக்காதா? என்று கண்ணீ ரோடு நாட்களை கழித்துக்கொண்டிருக்கிறீர்களா? வயது சென்றதி னிமித்தம் பலவீனப்பட்டு காணப்படுகிறீர்களா? தேவன் நீங்கள் இழந்த சுகத்தை மறுபடியும் கொடுக்க வல்லமையுள்ளவராயிருக் கிறார். **தேவனுடைய வார்த்தையானது ஆவியும் ஜீவனுமாயிருக் கிறது. இந்த ஜீவனுள்ள கர்த்தருடைய வார்த்தை உங்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.** அவர் தம்முடைய வசனத்தை அனுப்பி உன்னை குணமாக்குவார் (சங்கீதம் 107:20) என்று எழுதி யிருக்கிறபடி, தேவனுடைய வசனத்தினால் நீங்கள் குணப்படுவீர்கள்.

ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து கர்த்தருடைய வார்த்தையை வாசியுங்கள். ஆரோக்கியத்திற்கான வசனங்களை அறிக்கை செய்யுங்கள். உங்கள் பரிகாரியான தேவனிடமிருந்து இழந்த சுகத்தையும் ஆரோக்கியத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மேன்மையைத் திரும்பப் பெறுவீர்கள்

**யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தைந்தாம் தேதியிலே, ஏவில் மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக் கீனைச் சிறைச்சாலையிலிருந்து வெளிப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடே அன்பாய்ப்பேசி, அவனு டைய ஆசனத்தைத் தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக் களுடைய ஆசனங்களுக்கு மேலாக வைத்து, அவனுடைய சிறையிருப்பு வஸ்திரத்தை மாற்றினான். அவன் உயிரோடிருந்த சகல நாளும் தன் சமுகத்தில் நித்தம் போஜனம் பண்ணும்படி செய்தான். (எரேமியா 52:31-33)**

யோயாக்கீன் என்ற யூதாவின் ராஜா தன்னுடைய 18ம் வயதிலே யூதாவிற்கு ராஜாவானான். அவன் தன்னுடைய தகப்ப னாகிய யோயாக்கீமைப்போல கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப் பானதைச் செய்தான். அப்பொழுது நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றிக்கைப் போட்டான். யோயாக்கீனும் பாபிலோனிய படை களுக்கு எதிராக யுத்தம் பண்ணினபோது, யோயாக்கீனையும் அவன் பிரதானிகளையும் சிறைகைதிகளாக பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். வருடங்கள் உருண்டோடின. ராஜாவாக

சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்த யோயாக்கீன் 37 வருடங்களாக பாபிலோன் தேசத்தில் சிறைக்கைதியாக இருக்கிறான்.

பாபிலோனில் ராஜாக்கள் மாறுகிறார்கள். அதில் ஏவில் மெரோதாக் என்னும் பாபிலோனிய ராஜா சிறையிலிருந்த யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறையிலிருந்து விடுதலைப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடு அன்பாய் பேசி, அவனுயைட சிங்காசனத்தைத் தன்னோடே பாபிலோனிலிருந்த ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு மேலாக உயரமாக வைத்து, கைதியின் வஸ்திரத்தை மாற்றினான்.

யோயாக்கீனுடைய சிறையிருப்பின் நாட்கள் முடிந்து அவன் இழந்த மேன்மையை மறுபடியுமாய் உயர்த்தி வைத்த நாளைக்கூட வேதாகமம் குறிப்பிடுகிறது. ராஜ மேன்மையை இழந்து 37 வருடமான யோயாக்கீனுக்கு நம்பிக்கை இல்லை, தன்னை விடுவிக்க யாருமில்லை வாழ்நாள் முழுவதும் சிறையிலே காலத்தை கழிக்க வேண்டியது தான் என்று எண்ணியிருப்பான். ஆனால் ஒரு நாளில் கர்த்தர் அவன் இழந்த மேன்மையை திரும்ப கொடுத்து கனப்படுத்தினார்.

> **ஆசீர்வாதங்களைத் தொலைத்து விட்டேன் என்று கலங்காதீர்கள்... இழந்ததைத் தேவன் இரட்டிப்பாய்த் தருவார்.**

உங்கள் அலுவலகத்தில் மேன்மையையும் கனத்தையும் இழந்திருக்கிறீர்களா? உங்களுடைய பதவிகள் பறிக்கப்பட்டிருக்கிறதா? சாதாரண மனிதர்களைப் போல நடத்தப்படுகிறீர்களா? நீங்கள் வெட்கப்பட்டு தலைகுனிந்த இடத்தில் கர்த்தர் உங்கள் தலையை உயர்த்துவார். உங்களுடைய சிறையிருப்பின் வஸ்திரத்தை மாற்றி, பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உங்களை மேன்மையாக வைக்கப் போகிறார். சிறையிலிருந்த யோசேப்பை ஒரே நாளில் அரண்மனைக்கு கொண்டு வந்த தேவன், உங்களையும் நீங்கள் எதிர்பாராத நேரத்தில் உயர்த்துவார். **உங்களுக்கு வர வேண்டிய பதவி உயர்வு நிச்சயமாக வரும். எந்த மனிதனும் அதைத் தடுக்க முடியாது.**

## சந்தோஷத்தைத் திரும்பப் பெறுவீர்கள்

**உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் (சங்கீதம் 51:12)**

தாவீது, பத்சேபாளிடத்தில் பாவம் செய்ததினால் தேவனுடைய சமூகத்தை விட்டு தூரம் சென்றுவிட்டான். குற்றமனசாட்சியினால் பிடிக்கப்பட்டு, தான் பாவி என்ற உணர்ந்ததால் சந்தோஷம் இல்லாமல் இருந்தான். அந்நேரத்தில் கர்த்தாவே.. நான் இழந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை திரும்பவும் எனக்குத் தாரும் என்று ஜெபிக்கிறார். இன்றைக்கும் அநேகர் பாவம் செய்ததினிமித்தம் தேவனையும் அவருடைய சபையையும் விட்டுவிடுகிறார்கள். குற்ற உணர்வினால் மறுபடியும் தேவன் என்னை ஏற்றுக்கொள்வாரோ? என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். பரம ஈவை ருசிப்பார்த்து, தேவ தயவை மறுதலித்து தங்கள் வாழ்க்கையில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் இழந்து தவிக்கிறார்கள். நீங்களும் இப்படிப்பட்ட நிலைமையில் இருப்பீர்களென்றால் தேவனுடைய அன்பிற்குள்ளாக நீங்கள் ஓடி வரும்போது, நீங்கள் இழந்த சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தேவன் மறுபடியும் தர வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

தன்னுடைய தகப்பனின் சொத்துகளை வாங்கிக்கொண்டு மிகவும் பாவ வாழ்க்கை வாழ்ந்து, பணம் பொருட்கள், சமாதானம், நிம்மதியை இழந்து தன்னுடைய பசியை ஆற்றிக் கொள்வதற்காக பன்றிகள் உண்ணும் தவிட்டை தின்பதற்கு ஆசையாருந்த இளைய குமாரன், ஒரு நாள் தன்னுடைய தகப்பனிடத்திற்கு வருகிறான். மகனாக அல்ல, வேலைக்காரரில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும் என்று கெஞ்சி நிற்கிறான். ஆனால் அவனுடைய தகப்பனோ, அவனை மகனாக ஏற்றுக் கொண்டு அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, முத்தம் செய்தான்.

தன் ஊழியக்காரனை நோக்கி, ''கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம்'' என்று சொல்லி, நன்றாக சாப்பிட்டு சந்தோஷமாயிருந்தார்கள். இளையக்குமாரன் தகப்பனை விட்டு சென்றதினிமித்தம் அவனும் சந்தோஷத்தை இழந்தான், அவன் தகப்பனும் சந்தோஷத்தை இழந்தார். ஆனால் மறுபடியும் மனந்திரும்பி வந்தபோது இருவரும் இழந்த சந்தோஷத்தை திரும்பப் பெற்றுக்கொண்டார்கள்.

அன்பான தேவனுடைய பிள்ளைகளே, நீங்கள் மறுபடியுமாய் தகப்பனிடத்திற்கு திரும்பி வரும்போது நீங்கள் இழந்த சந்தோஷத்தை திரும்ப பெறுவீர்கள். குடும்பத்தில் கணவன் மனைவிக்கு இடையில் ஒரே பிரச்சனையாக இருக்கிறதா? வீட்டில் எந்த நேரமும் வாக்குவாதங்களும் சண்டைகளும் வந்துக்கொண்டிருக்கிறதா? உங்கள் குடும்பத்தை கணவன், மனைவி, பிள்ளைகளை தேவனுடைய ஆளுகைக்குள் ஒப்புக்கொடுங்கள். உங்கள் குடும்பத்தில் காணப்படுகிற தேவனுக்கு பிரியமற்ற காரியங்கள் இருந்தால் அதை எடுத்துப்போடுங்கள். தேவன் உங்கள் வீட்டில் வாசம் செய்ய வேண்டுமென்றால் வீடு பரிசுத்தமாயிருக்க வேண்டியது மிக அவசியம். சினிமா பாடல்கள் வீட்டில் ஒலிப்பதோ, சீரியல்கள் பார்த்துக்கொண்டிருப்பதோ, கெட்ட வார்த்தைகள் போன்ற அருவருப்பானவைகளை வீட்டிலிருந்து துரத்துங்கள். இரட்சிப்பின் கெம்பீர சத்தம் தொனிக்கும் கூடாரமாய் உங்கள் வீட்டை மாற்றுங்கள். அப்பொழுது தேவன் நீங்கள் இழந்த சமாதானத்தையும் சந்தோஷத்தையும் திரும்ப கொடுப்பார்.



# ரூஹா தொலைக்காட்சி ஊழியம்

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ரூஹா தொலைக்காட்சி ஊழியங்கள் மூலமாக அநேக இலட்ச ஜனங்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஜனங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு இரட்சிக்கப்படுகிறார்கள், தேவன் தருகிற அற்புத சுகத்தையும் விடுதலையையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள். கர்த்தருடைய நாமத்தின் மகிமைக்கென்று ஒவ்வொரு நாளும் அநேக சாட்சிகள் வந்துக்கொண்டிருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி **சுதந்திர தினத்தை முன்னிட்டு** பல சிறப்பு நிகழ்ச்சிகளை நமது **ரூஹா டிவி வழங்கியது.** விசேஷமாக அநேகர் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ப்ரீடம் எழுப்புதல் துதி ஆராதனை பெருவிழாவின் மூன்று நாட்கள் செய்தி ஒளிபரப்பப்பட்டது. **தங்களுடைய வாழ்க்கையின் நோக்கத்தை மறந்து ஆத்தும பிணைப்பில் சிக்கிக்கொண்டிருக்கிற வாலிபர்களை தேவன் எவ்வாறாக தன்னிடமாக இழுத்துக்கொள்கிறார்.** என்பதைப்பற்றி வாலிபர்களின் நடிப்புடன் சிறப்பு செய்திகளை போதகர் வழங்கியிருக்கிறார்கள். இதை ரூஹாடிவி யூடியூப் பக்கத்திலும் நீங்கள் காணலாம்.




ONE INDIA என்ற தலைப்பில் ரூஹா டிவியோடு இணைந்து சென்னை அண்ணா நகரில் உள்ள CSI Jessie Moses Matric Hr. Sec. Schoolபள்ளி மாணவ மாணவியர்கள் சிறப்பான நடனம், பாடல்கள், சிந்திக்கக்கூடிய நாடகங்கள் போன்றவைகளை ஒழுங்கு செய்திருந்தார்கள். இதற்கு அனுமதி வழங்கிய பள்ளி நிர்வாகக்குழுவிற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.




மேலும் சிறுவர்களுக்கான கலக்கல் குட்டீஸ், ஆராதனை வீரர்களின் இன்னும் துதிப்பேன் என்ற நேர்காணல் நிகழ்ச்சி, மற்றும் துதி ஆராதனைகள் ஒளிபரப்பப்பட்டது.

நாம் வாழ்கின்ற இந்த நாட்கள் கடைசி காலமாயிருக்கிறது. கர்த்தருடைய வருகை மிக சமீபமாயிருக்கிறபடியால் நரகத்திற்கு நேராக ஓடிக்கொண்டிருக்கிறவர்களை இயேசுவின் கல்வாரி அன்பிற்கு அழைத்து வர வேண்டியது நம்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. ஆகவே சுவிசேஷ பணியை தீவிரமாக ரூஹா டிவி மூலமாக அறிவித்து வருகிறோம்.




உங்கள்மேல் விழுந்த இந்த சுவிசேஷ பணியை நீங்கள் எங்களுடன் இணைந்து செய்ய உங்களை அன்போடு அழைக்கிறோம். ரூஹா தொலைக்காட்சி ஊழியத்தை உங்களுடைய விலையேறப்பெற்ற ஜெபத்தினாலும் பொருளாதாரத்தினாலும் தாங்குவதின் மூலம் நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கிறீர்கள். ஆகவே இதன்மூலமாக இரட்சிக்கப்படுகிற ஆத்துமாக்கள் உங்கள் கணக்கில் சேர்க்கப்படுவார்கள்.







**ஒவ்வொரு மாதமும் பல இலட்சங்களை செலவு செய்து இந்த சுவிசேஷ ஊழியத்தை செய்து வருகிறோம். நீங்கள் இந்த ஊழியத்தோடு சுவிசேஷ பங்காளர்களாய் இணைந்து தேவ ராஜ்ஜியத்தைக் கட்டுங்கள். ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக விதையுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பராக!**




**உங்களுடைய உதாரத்துவமான நன்கொடைகளை கீழ்கண்ட** GPay/ Phonepe **எண்ணிற்கோ அல்லது வங்கிக்கணக்கிற்கோ அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.**

**உங்கள நன்கொடைகளை அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரியுங்கள். உங்களுக்கு இரசீது அனுப்ப உதவியாயிருக்கும்.**

Account Name : RUAH MINISTRIES
Banker's Name : HDFC Bank
Account No : 05741450000037
Branch : Kodambakkam
IFSC Code : HDFC0000574
UPI VISA RuPay G Pay
9444150777



சாட்சிப் பகுதி

# நன்மை செய்தவரைத் துதியுங்கள்

***வாழ்க்கையில் தீராத வியாதி, கடன் பிரச்சனை, சமாதானமின்மை போன்ற ஏதோ ஒரு காரியத்தினால் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறீர்களா? இயேசு கிறிஸ்து இன்றும் உங்களுக்கு அற்புதங்களைச் செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார். ரூஹா ஊழியங்கள் மூலமாக தேவன் அநேகருக்கு விடுதலையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். கடந்த நாட்களில் ஜெபத்தைக் கேட்டு இயேசு செய்த அற்புதத்தின் சில சாட்சிகள்:***



## புற்றுநோயிலிருந்து பரிபூரண சுகம் கொடுத்தார்

என் பெயர் ஊர்மிலா பென்கமித். நான் குஜராத் மாநிலத்தில் வசித்து வருகிறேன். எனக்கு தைராய்டு கேன்சர் இருந்தது. இதனால் இரண்டு முறை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. கடந்த ஜீலை மாதம் எனக்கு **Radio Iodine Therapy** மேற்கொள்ளப்பட்டது. இதற்கு பின் ரிப்போர்ட்டில் கேன்சர் இல்லை என்று வர வேண்டும் என்று பாரத்தோடு ரூஹா ஊழியத்தைத் தொடர்பு கொண்டு ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். ஜெபவீரர்கள் எனக்காக ஜெபித்தார்கள். **கர்த்தருடைய பெரிதான கிருபையினால் தைராய்டு கேன்சரிலிருந்து பரிபூரண சுகம் கிடைத்தது.** மருத்துவரிடமிருந்து **No abnormal tracer uptake is seen anywhere else in the body** என்ற ரிப்போர்ட் வந்தது. கர்த்தருக்கே கோடான கோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

## குடும்ப பிரச்சனைகள் நீங்கி, மீண்டுமாக கணவரோடு இணையச் செய்தார்




என் பெயர் ஸ்டெல்லா மேரி (ஆந்திர மாநிலத்திலுள்ள சித்தூர் மாவட்டம்). ஒன்பது மாதங்களாக ரூஹா தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவர் கொடுக்கிற ஆசீர்வாதமான வார்த்தைகள் எல்லாமே எனக்காக பேசினதுபோல் இருக்கும். 2020 டிசம்பர் மாதம் 10 தேதி எனக்கு திருமணமானது. எனக்கும் என் கணவருக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக ஒன்பது மாதங்களாக பிரிந்திருந்தோம். பிரிந்திருந்த காலங்களில் தற்கொலைக்கு முயற்சித்தேன். இதனால் எனது கணவர் என்னை புறக்கணித்துவிட்டார். குடும்பம் முழுவதும் என்னை நிராகரித்துவிட்டார்கள். எல்லாரும் என்னுடைய நம்பரை பிளாக் பண்ணி விட்டார்கள். நான் தனிமையாக்கப் பட்டேன், நானும் என் கணவரும் சேர்ந்து வாழ வாய்ப்பே இல்லை. இந்நிலையில் "**சூப்பர் நேச்சுரல் திருப்புமுனை**" அற்புத கூடுகையில் ஆன்லைன் மூலமாக கலந்து கொண்டேன். ஜெப வேளையின்போது, போதகர், "**உங்களை விட்டு பிரிந்துபோன கணவருடைய** call**க்காக காத்துக்கொண்டு இருக்கிறீர்கள். உங்கள் கணவர் உங்களுக்கு** Call **பண்ணுவார், நீங்கள் சேர்ந்து சமாதானமாக வாழுவீர்கள்**" என்று சொன்னார். இந்த தீர்க்கதரிசன வார்த்தையை என் வாழ்வில் நிறைவேற்றும் ஆண்டவரே என்று ஜெபித்துக்கொண்டிருந்தேன். **எதிர்பாராதவிதமாக மறுநாள் என் கணவனிடமிருந்து அழைப்பு வந்தது. நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. "உன்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன். என்னை மன்னித்துவிடு" என்று என் கணவர் சொன்னார்.** சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்ற நிலையை மாற்றி கர்த்தர் இப்பொழுது என் கணவருடன் சேர்ந்து வாழ கிருபை செய்தார்.



## தற்கொலை எண்ணத்திலிருந்து விடுதலை தந்தார்

என் பெயர் கன்னிகா தேவ கிருபை. என்னுடைய வாழ்க்கையில் நான் மிகுந்த மனக்குழப்பத்தோடு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தேன். மனதில் சமாதானமே இல்லை. மனக்குழப்பங்கள் வரும்போதெல்லாம் தற்கொலை பண்ணிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இந்த தற்கொலை எண்ணத் திலிருந்து கர்த்தர் எனக்கு விடுதலைத் தரவேண்டும் என்று போதகர் ஜாய் அவர்களிடம் எனக்காக ஜெபிக்கும்படி கூறினேன். "சோர்ந்து போயிருக்கிறவனுக்கு சத்துவத்தையும் பெலத்தையும் தருகிற தேவனே, இந்த மகளின் சோர்வுகளையும் மனக்குழப்பங்களையும் மாற்றும்" என்று பாரத்தோடு ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தை கேட்டு மனக்குழப்பத்திலிருந்து விடுதலையையும் பூரண சமாதானத்தையும் கொடுத்தார்.

## மனஅழுத்தத்தலிருந்து விடுதலை தந்து தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றினார்




என்னுடைய பெயர் ரபி. நான் ராஜபாளயத்திலிருந்து வருகிறேன். என்னுடைய வேலையின் நிமித்தமாகவும், என்னுடைய **carrier** நிமித்தமாகவும், திறமைகள் இருந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற விரக்தியால் நான் மிகவும் மனஅழுத்தத்துடன் இருந்தேன். இந்த மனஅழுத்தத்தலிருந்து வெளியே வருவதற்கு உலகத்திலே என்னவெல்லாம் இருக்குமோ அதையெல்லாம் முயற்சித்தேன். கடற்கரைக்கு செல்வது, தனிமையாக இருப்பது, எதுவும்பிடிக்காமல் யாரிடமும் பேசாமல் அமைதியாக இருந்தேன். Carrier wise அடுத்து என்னுடைய life யை எப்படி Choose பண்ண போறேன் என்ற மன அழுத்தம் மிகுதியாக இருந்தது. அச்சமயத்தில் 2019 அஹாவா தீர்க்கதரிசன கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். அந்த கூட்டத்தில் கலந்துக்கொள்வதற்கு முன் அதிக போராட்டங்கள் இருந்தது, ஆகிலும் கர்த்தர் என்னை கிருபையாய் வர செய்தார். நான் அந்த கூட்டத்தில் கலந்துக்கொண்ட போது போதகர் ஆல்வின் அவர்கள் "**மனஅழுத்தத்திலிருந்து விடுதலை தருகிறார்**" என்று பேசினார்கள். போதகர் எனக்காகவே பேசினது போல இருந்தது. அந்த வார்த்தைகளை கேட்கும்போது எனக்குள் ஒரு விடுதலை உணர்ந்தேன். கூட்டம் முடிந்தவுடன் நான் போதரிடம் சென்று பேசினேன். போதகர் என்னிடம், "நீ 2 வருடங்களுக்கு பிறகு ஒரு மேற்கு திசை நாடுகளில் உன் குடும்பத்தோடு கர்த்தரை மகிமைப்படுத்துவதை நான் காண்கிறேன்" என்று தீர்க்கதரிசனமாக பேசினார். நான் என் பெற்றோரிடம், "**பாஸ்டர் ரொம்ப positive ஆக, encouragement ஆக, Motivational ஆக பேசினார்" என்றேன். எனக்கு அற்புதம் நடக்கும் என்று என் மனதில் நினைக்கவில்லை. ஆனால் கர்த்தர் அந்த தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றினார்.** இப்போது அமெரிக்கா தேசத்தில் உள்ள Columbia University Irving Medical Center (CUIMC)ல் படிப்பதற்கு கிருபை செய்திருக்கிறார். மன அழுத்தத்திலிருந்து என்னை விடுதலையாக்கி, நான் விசுவாசிக்காவிட்டாலும் தீர்க்கதரிசன வார்த்தையை என் வாழ்வில் நிறைவேற்றின தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.



## 12 வருடங்களுக்கு பிறகு, தீர்க்கதரிசனத்தின் குழந்தையைக் கொடுத்தார்

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எங்களுடைய திருமணம் நடைபெற்றது. 12 வருடங்களாக குழந்தை இல்லாதிருந்தோம். குழந்தை பாக்கியத்திற்காக நாங்கள் அநேக மருத்துவமனைகளுக்குச் சென்றோம். ஒன்றும் பயனில்லை. உற்றார் உறவினர்களாலும், நண்பர்களாலும், மிகவும் நிந்திக்கப்பட்டோம், அவமானப்படுத்தப்பட்டோம். இந்நிலையிலே ஆண்டவரிடத்தில் கண்ணீரோடு தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தோம். இந்நிலையிலே 2017ம் ஆண்டு போதகர். ஆல்வின் தாமஸ் அவர்கள் துடியலூரில் ஊழியம் செய்ய வந்திருந்தார்கள். ஆராதனையின்போது போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள், "குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கிறவர்கள் முன்பாகவரும்படி அழைத்தார்கள்." விருப்பமில்லாமல் எனது உறவினர்களின் கட்டாயத்தினிமித்தமாக நான் போதகரிடத்தில் ஜெபிக்கும்படி முன்பாக சென்றேன். போதகர் அவர்கள், "கர்த்தர் உங்களுக்கு நிச்சயமாக அடுத்த ஆண்டு இந்நேரத்திலே பெண் பிள்ளையை கொடுப்பாரென்று தீர்க்கதரிசனமாக சொன்னார்கள். "**இதுவரை 30 முறைக்கும் மேலாக** Pregnancy Test **எடுத்திருக்கிறேன். அப்போதெல்லாம்** Result**ல் தோல்வியைதான் சந்தித்திருக்கிறேன். ஆனால் இந்த முறை** Pregnancy Test**ஐ எடுத்துப் பார்த்தபோது, கர்த்தர் என் வாழ்விலே ஆச்சரியத்தைக் காணச் செய்தார்.** அப்படிப்பட்ட ஆச்சரியத்தை எங்களின் நாவுகளால் விவரிக்க முடியாததாய் இருந்தது போதகரின் மூலமாக கர்த்தர் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தையை எங்களின் வாழ்விலே நிறைவேற்றினார். கர்த்தருக்கே எல்லா மகிமையும் கனத்தையும் செலுத்துகிறோம்.

## ஜெபத்தைக் கேட்டு அரசு பணியைக் கொடுத்தார்



என் பெயர் கீதா. நான் கடந்த ஏப்ரல் மாதம் ரூஹா திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டேன். நான் ஒரு கான்டிராக்டில் வேலைச் செய்துக்கொண்டிருந்தேன். சம்பளம் எனக்கு போதாததினால், என் குடும்ப நிலையின் காரணமாக அரசு பணிக்கு விண்ணப்பித்திருந்தேன். அதற்கான இன்டர்வியூ Letter வந்த போது, ஜாய் அவர்களிடம் இந்த வேலைக்கிடைக்கும் பெஜபித்துக்கொள்ளும்படி கூறினேன். அவர்கள் பாரத்தோடு எனக்காக ஜெபித்தார்கள். நான் Interviewக்கு சென்றபோது அந்த Interview Attend பண்ண யாரும் வரவில்லை. நான் மட்டும்தான் வந்திருந்தேன். பெரிய அதிகாரிகளிடம் பேசுவதற்கு எனக்கு பயமாக இருந்தாலும், கர்த்தர் எனக்கு ஞானத்தையும், தைரியத்தையும் கொடுத்து, அரசாங்க வேலையை கிடைக்கும்படி செய்தார்.

**அன்பானவர்களே! இவர்களுக்கு அற்புதம் செய்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, உங்களுக்கும் அற்புதம் செய்வார். உங்கள் ஜெபவிண்ணப்பங்கள் எதுவாயிருந்தாலும் கீழே உள்ள தொலைப்பேசி எண்ணுக்கு போன் மூலமாகவோ, வாட்சப் மூலமாகவோ தெரியப்படுத்துங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம். மேலும் நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து அற்புதங்களைப் பெற்றிருப்பீர்களென்றால் உங்கள் சாட்சியை தேவ நாமத்தின் மகிமைக்கென்று எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். தொலைப்பேசி எண்கள் 9884901777, 044 - 61328777**




**என்** அருமை நண்பர்களே!!! இந்த வாலிபர் பகுதி மூலமாக ஆண்டவர் உங்களோடு மாதந்தோறும் இடைப்படுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஒவ்வொரு நாளும் ஆண்டவர் மிகவும் அற்புதமாக நடத்தி கொண்டு வருகிறார். அவர் நடத்துகிற விதத்தை குறித்து பூரண வார்த்தையில் சொல்லவே முடியாது. நிச்சயமாக உங்களையும் அப்படியே வழிநடத்தும் நல்மேய்ப்பனாய் இருக்கிறார் என்று உறுதிக்கொள்கிறேன். நாட்களும் மாதங்களும் இந்த வருஷத்தில் பறந்த வண்ணமாகவே இருக்கின்றன. பறந்து போகிற காலத்த நில்லுனு சொல்ல முடியாது மாறாக செட்டைகளை அடித்து உயர வேகமா காலத்தோடே இணைந்து பறக்கலாம். Alright, கர்த்தருடைய கிருபையினால கடந்த ஜூலை மாதம் 22ஆம் தேதி Uravu என்ற EPலிருந்து title track **"என் உறவே"**என்ற பாடலை வெளியிட தேவன் உதவி செய்தார். அநேக தடைகளையும், தாமதங்களையும் கடந்து இந்த பாடல் வெளிவந்துள்ளது. பலருக்கு ஆசீர்வாதமாக மாறிவிட்ட இப்பாடல் இருதயம் நொறுங்குண்டவர்களிடமிருந்து சாட்சிகளை கொண்டுவந்து சேர்க்கிறது. சரி, உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்க போறேன். எத்தனை பேருக்கு உங்க அப்பானா ரொம்ப புடிக்கும்?. Ofcourse yesனு தான் நிறைய பேர் சொல்லுவீங்க. அப்பானாலே எல்லாருக்கும் பிடிக்கும் தானே. அப்படிப்பட்ட அப்பாவின் உறவை குறித்தது தான் இந்த "என் உறவே" பாடல்.

அம்மா அப்பா மேல தனி அன்பு, பாசம், அக்கரைனு எல்லாமே நமக்கு உண்டு. இருந்தாலும் நம்ம சின்ன வயசுல அப்பா அப்படினாலே ஒரு excitement நமக்கு வந்திடும். ஏன்னா நம்ம அப்பா நம்மள வெளிய கூட்டிட்டு போவாரு, உலகம் எப்படி இருக்கும் என்று நமக்கு காட்டுவாரு. ஒவ்வொன்றாக சொல்லி கொடுப்பாரு. அம்மாக்கூட வீட்டுலயே இருந்து பழகிட்டு அப்பா கடைக்கு கூட்டிட்டு போறேன்னு சொன்னதும் நாம எல்லாம் குஷி ஆகிடுவோம். சின்ன வயசுல நான் எங்க அப்பாக்கூட கடைக்கு போகிறதுக்கு ரொம்ப காத்துக்கொண்டிருப்பேன். எங்க அப்பா என்னை கூட்டிக்கொண்டு போகும்போது எனக்கு எல்லையில்லா சந்தோஷம் கிடைக்கும். என் உள்ளங்கையை அவர் இறுகப்பிடித்து என்னை நடத்தி கொண்டுப்போவது இன்னும் என் நினைவில் ஆழமாய் பதிந்துள்ளது. திரும்ப வீட்டிற்கு வரும் போது எங்க அம்மா கேப்பாங்க, "என்ன, உங்க daddyயோட நல்லா enjoy பண்ணியானு?". இப்போ வரைக்கும் அப்பாக்கூட வெளியே எங்கே கடந்து சென்றாலும் மகிழ்ச்சியாக இருக்கும். ஒரு உலக தகப்பனே தன் பிள்ளையின் மீது இத்தனை அன்பும், கரிசனையும் கொண்டிருப்பார் என்றால் நம் பரமதகப்பன் எந்த அளவிற்கு நம் மீது அன்பாயிருப்பார்? அந்த அன்பை, உறவை குறித்து தான் "என் உறவே" பாடலில் இருந்து நாம் பார்க்க போகிறோம். வாங்க! நம்ம அப்பா கூட ஒரு Jolly ah ஒரு ride போலாம்...

## INNER HEALING உள்ளான சுகம்

இந்த பாடலின் துவக்கமே **"நொறுங்குண்ட இதயத்தை தகப்பன் நீர் கண்டீர்"** என்று ஆரம்பிக்கும். இது நம் உலக தகப்ப னுக்கும் நம் பிதாவாகிய தேவனுக்கும் உள்ள வித்தியாசம். ஆம், நமக்கு சரீரத்தில் ஏதேனும் காயம் ஏற்பட்டால் அதை நம் தகப்பன் எப்படியாக குணமாக்க முயற்சிப்பார். குணமாக்கும் பணிகளை நமக்கு செய்வார். நம்மைப் பராமரிப்பார். ஆனால் குழந்தை பருவத்தை தாண்டி நாம் வளர்ந்த பிறகு சில காயங்களால் நம் இருதயம் உடைக்கப் பட்டிருக்கும். அப்பொழுது நம்மை எந்த மருத்துவத்தால் குண மாக்க முடியும்? **சங்கீதம் 34:18 நொறுங்குண்ட இருதயமுள்ளவர் களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர் களை இரட்சிக்கிறார்.** என்ற வசனத்தின்படி உள்ளான காயங் களை ஆற்ற பரம தகப்பனே சமீபமாய் வருகிறார். ஒரு வேளை நம் தகப்பனும் தாயும், நாம், நம் உணர்வுகளை வெளிப்படுத்தும்போது புரிந்துக்கொள்ளலாம். ஆனால் நம் பிதா ஒருவரே நம்மை குணப்படுத்து கிறார். **"காயங்கள் கட்டிட ஓடோடி வந்தீர்"** என்ற வரியில் எழுதியிருப் பதை போல் உள்ளத்தினுள் நீங்களும் நானும் படுகிற எத்தனையோ காயங்களில் இருந்து நம்மை விடுபட செய்தவர் அவரே. கொஞ்சம் நெனைச்சி பாருங்க, உள்ளம் உடைந்து போன சூழ்நிலையில என் மனதை குணப்படுத்த முடியாது என்று நீங்கள் நினைத்த போது அவரே காயங்களை ஆற்றி உங்களை இப்பொழுது அதை மறந்து மகிழ்ந்திருக்க பண்ணுகிறார். அவர் உங்கள் இருதயத்தின் மேல் மிகவும் கரிசனை உள்ளவர். இருதயத்தால் தாங்க முடியா துயரம் வரும்போது அவர் தாமே ரணவைத்தியராக துயரங்களை நீக்கு கிறார். ஆண்டவர் நம்மள குணமாக்குறதுனாலே தான் இன்று நம் மனது நன்றாக உள்ளது. இருதயத்தின் நினைவுகளை அவரே அறிகிறார். பாரங்களை அவரே மிகவும் கூர்மையாக கவனித்து அவற்றை செயல்படுத்திவருகிறார். **"உங்களுக்கே தெரியாம அவர் உங்கள சுகமாக்கிட்டு இருக்கிறார்".** மனிதர்கள் வார்த்தைகளால் நம்மை குத்தும் போது அதனை மென்மையாக குணப்படுத்துகிறார் நம் ஆண்டவர். நாம் வெறுத்தவர்களை மீண்டும் மன்னிக்கச்செய்து நேசிக்க செய்பவர் அவரே. நம் உள்ளத்தை ஒவ்வொரு நாளும் சீர்படுத்தி சுத்திகரிப்பவர் அவரே. அவருக்கு உங்களின் உள்ளான சுகம் (Inner Healing) ரொம்ப முக்கியம்.

**"கண்ணீரை முற்றிலும் மதுரமாய்மாற்றி என்னை நிரப்பிய ஆனந்த தைலமே"** நம் கண்ணீரின் அளவை அவர் கணக்கில் வைத்திருக்கிறார். எந்தெந்த காரியங்களுக்காக கண்ணீர் சிந்தப் பட்டதோ அவற்றுக்கெல்லாம் பதிலையும் கர்த்தர் வைத்திருக்கிறார். மாராவின் கசப்பான அனுபவங்களை மதுரமாய் மாற்ற ஒவ்வொரு நாளும் அவர் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறார். பாவசேற்றில் இருந்த நம்மை தூக்கி எடுத்து தம் சொந்த இரத்தத்தினாலே கழுவி புது மனிதனாக்கி தம் பிள்ளையாய் மாற்றியிருக்கிறார். எத்தனையோ முறை தவறு செய்த போதும், அவரை விட்டு தூரம் சென்ற பிறகும் நமக்காய் ஏங்குகின்ற நல் தகப்பனவர். நாம் மீண்டும் அவரி டம் செல்லும்போது நம்மை மார்போடு அணைத்து பாவத்தின் காரியங் களை நம் இருதயத்தினின்று நீக்கி நம்மை பரிசுத்தமாக்குகிறார்.

இவ்வாறு காயங்கட்டும் மருத்துவராக இருக்கும் நம் ஆண்டவர் நம்மோட தகப்பனாக இருப்பதினால், நாம் நம்முடைய வேதனைகளை குறித்தும், கவலைகளை குறித்தும் கலங்க வேண்டியதில்லை. பிறரி டம் கூறமுடியா மனதின் வியாகுலங்களையெல்லாம் அவரே நீக்குகி றார். எனவே, கலக்கம் வேண்டாம் உங்களுக்கு ஓர் தகப்பனுண்டு!!

## தகப்பனோடு இருக்கும் "உறவு":

பழைய ஏற்பட்டு காலத்தில் பிதாவாகிய தேவனை சர்வவல்லமை யுள்ள தேவனாக, எஜமானனாக, நியாயந்தீர்ப்பவராக, அற்புதங்களை செய்பவராக, பட்சிக்கிற அக்கினியாக, ஒருவரும் கிட்டி சேர முடியாத

இடத்தில இருப்பவராகவே அவர்கள் கண்டனர். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே இருக்கும் உறவினை நாம் பார்க்க முடியாது. ஆனால் நம் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் மூலம் தூரமாய் இருந்த நாம் தேவனுக்கு சமீபமானோம். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். (எபேசியர் 2:13) ஏதேனில் தேவன் உறவாடவே ஆதாமையும் ஏவாளையும் சந்திக்கவந்தார். மனிதனுடன் இருப்பதான உறவில் மகிழ்பவர் நம் ஆண்டவர். ஆனால் ஆதாமால் ஏற்பட்ட பிளவை சீரமைத்து உறவை புதுப்பித்தார் இயேசு கிறிஸ்து. இதுவரை தேவனை தகப்பன் என்ற உறவிலே பார்க்காத இவ்வுலகம் தன் ஒரேபேறான குமாரன் மூலம் கண்டடைந்தது. மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். (கலாத்தியர் 4:6) என்ற வசனத்தின்படி பிதாவை "அப்பா" என்றழைக்கும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

நம்முடன் இழந்த போன உறவை புதுப்பித்து கொள்ளவே பாவம் என்கிற மதிலை உடைத்து தம் குமாரனை வழியாக உண்டு பண்ணினார். பழைய ஏற்பாட்டு மக்களுக்கு கிடைக்காத பாக்கியத்தை இன்று நீங்களும் நானும் இயேசுவின் மூலமாய் பெற்றுக் கொண்டோம். அவரின் சொந்த குமாரனையே ஜீவபலியாக நமக்காக ஒப்புக்கொடுப்பதின் காரணம் என்ன? உங்களையும் என்னையும் மகனாக, மகளாக ஏற்றுக்கொண்டு எப்பொழுதும் இம்மானுவேலராக நம்மோடு இருப்பதற்காகத்தான். அன்று அவர்களால் எளிதில் எதையும் பிதாவினிடம் கூறமுடியவில்லை, ஆனால் இன்றைக்கு அவர் நமக்குள் வாசமாயிருக்கிறார். நாமே அவர் தங்கும் ஆலயமாக இருக்கிறோம். அவரின் மகிமை நமக்குள்ளேயே இருக்கிறது. 24 மணி நேரமும் அவரோடு உறவாடும் வழியை உருவாக்கியுள்ளார். சற்று யோசித்து பாருங்களேன், உங்களோடும், என்னோடும் உறவாட வேண்டும் என்பதற்காகவே அவர் மனித அவதாரம் எடுத்து நமக்காக வந்தார்.

இவ்வுலகை படைத்த தேவன் உறவிற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை பாருங்கள்! அது தான் அவரின் விருப்பம். உறவாடும் தகப்பனாய், பேசும் தெய்வமாய், அற்புதங்களை செய்பவராய் நமக்குள்ளே வாசமாயிருக்கிறார். அவரின் எதிர்பார்ப்பு, நாம் அவரின் அன்பை புரிந்துக் கொண்டு அவரோடு எந்நேரமும் பேசுவதே ஆகும். உறவை முதன்மைப்படுத்துவதில் இயேசுவை அநேக நேரங்களில் நாம் சிந்திப்பதே இல்லை. நம்முடைய எதிர்பார்ப்பும், விருப்பமும் நமக்கு பிரியமானவர்கள் நம்மோடு பேச வேண்டும் என்பதே. நம் செவி ஏங்குவது நாம் நேசிக்கிற நபரின் குரலுக்காக இருப்பதுபோல தேவனும் நம்முடைய குரலில் "அப்பா" என்றழைக்கும் குரல் கேட்கவே அவர் ஏங்குகிறார். நம்முடைய சிறு சிறு உதடு அசைவுகளையும் அவர் கவனிக்கிறார். நம் மனதில் நினைக்கிற ஒவ்வொரு நினைவுகளையும் அவர் அறிகிறார். நாம் மறக்கிற காரியங்களை அவர் நினைவில் கொண்டுள்ளார். நம்முடைய minute details கூட அவருக்கு நன்றாக தெரியும். உங்களை முற்றும் அறிந்தவர் யார் என்றால் இவ்வுலகில் அவரை விட வேறே யாருமில்லை. நமக்கு எது நல்லது என்று அறிந்த பரமதகப்பன் நன்மையான ஈவுகளையே தருகிறார். இந்த தகப்பனுடன் தினமும் பேச நமக்கு நேரம் இல்லாமல் போய்விட்டது. படிப்பு, வேலை, குடும்ப பொறுப்புகள், ஊழிய காரியங்கள் என அநேக காரியங்களில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் 24 மணி நேரத்தில் ஒரு மணி நேரத்தை தகப்பனுடன் உரையாட தவறுகிறோம். நீங்க உங்க அப்பா கிட்ட பேசுற மாதிரியே பேசலாம். அவர் ஆண்டவர் அவரிடம் எப்படி நான் சகஜமாய் பேசுறதுனு யோசிக்காதீங்க. நீங்க அந்த மாதிரி அவருடன் பழக வேண்டும் என்று தான் நினைக்கிறார்.

**"பல வருடங்களுக்கு முன்பாக ஒரு குட்டி பொண்ணு தன் அப்பாவிடம் கிறிஸ்துமஸிற்கு தனக்கு புதுசா 5 dresses வேண்டும் என்று கூறி 10 விரல்களை காட்டினாள். அப்போது அவள் தகப்பன் தன் இயலாமையைக் கண்டு ஆண்டவரிடத்தில் ஜெபித்தார். ஆண்டவர் கேட்டு அந்த வருடம் அவளுக்கு 12 புதிய ஆடைகளை தந்தாராம்."** அவள் கேட்டது 5 ஆடைகள் தான், தன் உலக தகப்பனிடம் காட்டின விரல்களோ 10, ஆனால் பரம தகப்பன் அவளுக்கு 12 ஆடைகளை தந்திருக்கிறார். நண்பர்களே! அந்த குட்டி பொண்ணு நான் தான். இப்டி தான் நாம் எண்ணுவதற்கும் அதிகமாகவே அவர் எப்பொழுதும் செய்வார். ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத் 7:11)

## 3. யாருமில்லா உனக்கு அவரே "உறவு"

"அவர் இருப்பதினாலே நான் பயப்பட மாட்டேன்
எனக்காக யுத்தங்கள் செய்பவரே
அவர் இருப்பதினாலே நான் இளைப்பாறுவேன்
எனக்காக வெற்றி சிறந்தவரே"

என்ற வரிகள் நமக்காக ஒருவர் உண்டு என்பதை தெரிவிக்கிறது. ஒரு வேளை இன்றைக்கு உங்களுக்கு தகப்பன் என்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லாத சூழலில் நின்றுக்கொண்டிருக்கலாம் அல்லது தகப்பன் இருந்தும் அவரை விட்டு பிரிந்திருக்கும் நிலைமையில் இருக்கலாம். யாருமே இல்லாத தனிமையான வாழ்வை வாழ்ந்துக்கொண்டிருக்கும் என் அன்பான சகோதர சகோதரிகளே தலைமுறை தலைமுறைகளாக சதாகாலமும் நீடிக்கும் உறவு ஒன்று உங்களுக்கு இந்த உலகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த உறவு முறியாது, பிளவை ஏற்படுத்தாது, பொய்யான வாக்குகளை கொடுக்காது, ஒருபோதும் உங்களை விட்டு பிரியாது, உங்கள் உயர்வில் மகிழும் உறவு, உங்கள் சார்பில் நிற்கும் உறவு, எல்லா சூழ்நிலையிலும் உங்களுக்கென பேசும் உறவு, நீங்கள் வேதனைப்படும் போது உங்களுடன் வேதனையில் துணையாய் இருக்கும் உறவு, உங்களை பரிசுத்தமாக்கும் உறவு, உங்களை பயன்படுத்தி பரலோகம் கூட்டி செல்லும் உறவே இந்த மெய்யான கபடற்ற உறவு.

*"என் உயிரே என் இயேசுவே என் துணையாளரே
என் இயேசுவே என் உறவே என் இயேசுவே
எனக்கெல்லாம் என் இயேசு தானே"*

இந்த அழகான வரிகள் சொல்வதுபோல் எனக்கு உயிர், செல்வம், துணை என்று ஒருவர் இருக்கிறார்.அவரே என் தகப்பன். அவர் என்னோடு இருப்பதினால் நான் பயப்படாமல் என் எதிர்காலத்தை நோக்கி முன்செல்லுவேன் என்று திட நம்பிக்கையோடு இருங்கள். உங்கள் எண்ணங்கள், ஏக்கங்கள், யோசனைகள், விருப்பங்கள், ஏமாற்றங்கள், காயங்கள், எதிர்பார்ப்புகள் என எல்லாவற்றையும் அவரோடு பகிர்ந்துக்கொள்ளுங்கள். உங்களுக்காய் ஜீவனையே ஈந்த நல்ல தகப்பன் அவர். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:20) என்று வாக்குரைத்தவர் இன்றும் அதை செய்துக் கொண்டிருக்கிறார் இனியும் செய்வார். தகப்பனோடு நெருங்கிய உறவில் என்றென்றுமே நிலைத்திருக்க என் வாழ்த்துக்கள். **"என் உறவே" என்ற பாடலை Cherie Mitchelle Music என்ற youtube பக்கத்தில் கண்டு ஆசீர்வதிக்கப்படுங்கள்.**

DAY OF Atonement

# பாவ நிவர்த்தி நாள்



- போதகர் ஜாய் ஆல்வின்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இந்த சிறப்பு செய்தி வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு முக்கிய பண்டிகையின் மாதம். செப்டம்பர் 24ம் தேதி மாலையிலிருந்து 25ம் தேதி மாலை வரை பாவ நிவர்த்தி நாளாகக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்கும் இது மிக முக்கியம்.

எகிப்திலிருந்து கானானுக்கு நேராக புறப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தர் ஒரு வருடமும் ஆசரிக்க வேண்டிய பண்டிகைகளைக் குறித்து பேசினார். இந்த பண்டிகைகள் லேவியராகமம் 23ம் அதிகாரத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இந்த பண்டிகைகள் அனைத்தும் புதிய ஏற்பாட்டு சபைகளாகிய நமக்கு ஆழமான அர்த்தங்களைத் தெரிவிக்கின்றன. இவைகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, இறப்பு, உயிர்த்தெழுதல் என எல்லாவற்றிற்கும் நிழலாட்டமாக இருக்கிறது.

முதல் மூன்று பண்டிகைகளான பஸ்கா, புளிப்பில்லாத அப்பம், மற்றும் முதற்பலன்கள் வருடத்தின் வசந்த காலத்தில் எட்டு நாட்களுக்குள் வேகமாக அடுத்தடுத்து நிகழ்கின்றன. அவை கூட்டாக "பஸ்கா" என்று குறிப்பிடப்படுகின்றன.

நான்காவது பண்டிகை ஐம்பது நாட்களுக்குப் பிறகு கோடையின் தொடக்கத்தில் நிகழ்கிறது. புதிய ஏற்பாட்டு காலங்களில் இந்த பண்டிகை அதன் கிரேக்கப் பெயரான "பெந்தெகொஸ்தே" என்று அறியப்பட்டது. இது "ஐம்பது" என்று பொருள்படும்.

கடைசியாக, எக்காள பண்டிகை, பாவநிவிர்த்தி நாள், மற்றும் கூடாரப் பண்டிகை ஆகியவை ஆண்டின் இலையுதிர் காலத்தில் இருபத்தொரு நாட்கள் நீடிக்கும். அவை கூட்டாக "கூடாரங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

இந்த பண்டிகைகள் ஒவ்வொன்றும் எபிரேயர்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க நேரங்களாக இருந்தன. ஏனென்றால் அவைகள் இஸ்ரவேல் புத்திரரையும் அவர்களின் சந்ததியினரையும் தேவன் அவர்களின் வாழ்க்கையில் செய்த அற்புதங்களையும், மகத்துவங்களையும் கனப்படுத்தும்படி சுட்டிக்காட்டியது. இதில் மிக முக்கியமாக, ஒவ்வொரு பண்டிகையும் மேசியாவையும் அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் முக்கிய பகுதியைத் தனித்துவமாக விவரிக்கிறது.

## பாவ நிவர்த்தி நாள்

இந்த பாவ நிவர்த்தி நாள் இஸ்ரலேர்களுக்கு மிக முக்கியமான நாள். இதை "Yom Kipur" என்றும் அழைப்பார்கள். அந்நாளில் ஒரு விசேஷமான காரியம் நடைபெறும். ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவாரண பலியாகக் காளையைப் பலியிட்டு, பாவநிவிர்த்தி செய்யக்கடவன். இஸ்ரவேல் ஜனங்களுக்காக பாவநிவாரணபலியாக இரண்டு வெள்ளாட்டுக்குட்டிகளையும், சர்வாங்க தகனபலிக்காக ஒரு ஆட்டுக்கடாவையும் எடுத்துக்கொள்ளக்கடவன். பிற்பாடு ஆரோன் இஸ்ரவேலர்கள் கொண்டு வந்த இரண்டு வெள்ளாடுகளை எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கர்த்தருடைய சந்நிதியில் நிறுத்துவான். ஆரோன் இரண்டு வெள்ளாடுகளின்மேல் சீட்டுப்போட்டு, ஒன்று தேவனுக்கும் மற்றொன்று போக்காடாக விடப்படும். கர்த்தருடைய சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவை ஆரோன் கொண்டுவந்து, பாவநிவாரண பலியாகச் செலுத்துவான்.

ஒரு ஆடு பாவ நிவாராண பலியாகக் கொல்லப்பட்டது, மற்றொரு ஆட்டின் தலையின்மேல் கையை வைத்து, மக்களின் பாவங்களை ஆட்டின்மேல் சுமத்தி, வனாந்தரத்திற்குக் கொண்டு செல்லப்படும். வருடத்திற்கு ஒருமுறை நடக்கும் இந்நாளில்தான், கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபக்கலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டு வந்து, தான் சாகாதபடிக்குத் தூப மேகமானது சாட்சிப் பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன்.



பின்பு பிரதான ஆசாரியன் பாவநிவாரண பலியின் இரத்தத்துடன் திரைக்குள் மகா பரிசுத்தமான ஸ்தலத்திற்குள் நுழைந்து, கிருபாசனத்தின்மேல் இரத்தத்தை ஏழுதரம் தெளிப்பான். இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளினிமித்தமும், அவர்களுடைய சகல பாவங்களினாலும் உண்டான அவர்களுடைய மீறுதல்களினிமித்தமும், பரிசுத்த ஸ்தலத்திற்காகப் பிராயச்சித்தஞ்செய்து, அவர்களிடத்தில் அவர்களுடைய தீட்டுகளுக்குள்ளே நிற்கிற ஆசரிப்புக்கூடாரத்திற்காகவும் அப்படியே செய்வான்.

பாவநிவிர்த்தியின் மாபெரும் நாளில் பாவநிவாரண பலியின் இரத்தமானது எல்லா பாவங்களையும், எல்லா அக்கிரமங்களையும், எல்லா மீறுதல்களையும் சுத்திகரித்தது. அன்றைய தினமும் ஜனங்களுடைய பாவங்கள் நிவர்த்தி செய்யப்பட்டு பரிசுத்தமானார்கள்.

சர்வவல்லமையுள்ள தேவன் சகரியா தீர்க்கதரிசி மூலம் இதை அறிவிக்கிறார்: "நான் அந்த தேசத்தின் அக்கிரமத்தை ஒரே நாளில் அகற்றுவேன்" (சகரியா 3:9). இஸ்ரவேல் தேசம் ஆண்டுதோறும் பாவநிவிர்த்தி தினத்தை அனுசரித்து வருகிறார்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கல்வாரியின் சிலுவையில் தொங்கி, "முடிந்தது" (யோவான் 19:30) என்று சொன்னபோது, நம்முடைய அற்புதமான கர்த்தராகிய இயேசுவின் மூலமாக இந்தப் பண்டிகை முழுமையாக நிறைவேறியது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் அந்நாளில் தேவனுக்கு முன்பாக தாழ்மையோடு நிற்கும்போது, பாவத்தின் வல்லமையை முற்றிலுமாக அழிக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையின் வெளிப்பாட்டின் முழுமையை அறிவோம். அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக நாம் பரிபூரணமாக நிற்போம், கடைசியில் எல்லா அக்கிரமங்களிலிருந்தும், மீறுதல்களிலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுபடுவோம்.

## ஒப்புரவாகுதல்

பரிகாரம் என்ற வார்த்தையின் அர்த்தம் "ஒப்புரவாகுதல்". ஏனென்றால் அந்த நாள் தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையே ஒப்புரவைக் கொண்டு வரும். மேலும் அனைத்து பண்டிகைகளிலும் மிகவும் புனிதமானதாக எண்ணப்பட்ட பாவநிவிர்த்தி நாளானது, கிறிஸ்து இயேசு கல்வாரியின் சிலுவையில் மரித்தபோது அவரால் நிறைவேற்றப்பட்டது. இந்த பண்டிகையின் முழு வெளிப்பாட்டைக் காணும்போது அந்த தனித்தன்மை கொண்டாட்டமாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை, அவருடைய மகிமையான பிரசன்னத்தில் நாம் பரிபூரணமாக நிற்கும்போது, எல்லா பாவங்களையும், எல்லா அக்கிரமங்களையும், எல்லா மீறதல்களையும் முடிவுக்குக் கொண்டு வந்து, சபையாகிய நம்மை பரிபூரணத்திற்குக் கொண்டுவரும் ஒரு நாள்!

அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே. இயேசு கிறிஸ்துவினுடைய ஒரே சரீரம் தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார். (எபிரெயர் 10:4,10,14)



## பாவ நிவர்த்தி நாளும் இயேசு கிறிஸ்துவும்

அன்றைக்கு பாவ நிவர்த்தி நாளன்று வெள்ளாட்டுக்கடா கொல்லப்பட்டது. அது இஸ்ரவேல் ஜனங்களுக்காக வருடந்தோறும் கொல்லப்பட்டது. ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தினால் அல்ல, ஒரே தரம் மரித்து, தன்னுடைய இரத்தத்தினாலே உலகம் முழுவதும் உள்ள ஜனங்களுக்கு பாவ நிவர்த்தியை உண்டு பண்ணினார்.

ஆம், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக பலியானதினிமித்தம் நாம் இன்றைக்கு தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம். அவருடைய இரத்தமே நம்மை நீதிமான்களாய் மாற்றியிருக்கிறது. மேலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் இன்றும் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறதாயிருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும். ஆகவே நீங்களும் நானும் அவருடைய இரத்தத்தினாலே விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

போக்காடாக விடப்பட்ட ஆடும் ஆண்வராகிய இயேசுகிறிஸ்துவையே குறிக்கிறது. "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:6) என்று வேதம் சொல்லுகிறது. ஆம், அந்த போக்காட்டின் மேல் ஜனங்களுடைய பாவங்கள் அனைத்தும் சுமத்தப்பட்டு வனாந்திரத்திற்கு அனுப்பிவிடப்பட்டதுபோல, இயேசுகிறிஸ்துவும் வின்மேல் நம்மெல்லாருடைய பாவங்கள், சாபங்கள், அக்கிரமங்களை சுமந்தவராய் வனாந்திரத்திற்கு பட்டணத்திற்கு வெளியே அழைத்துக்கொண்டு போகப்பட்டார்.

இந்த பாவ நிவர்த்தி நாளில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக பரிகார பலியாகி சிலுவையில் இரத்தம் சிந்தினதை எண்ணி, நன்றி செலுத்துவோம். ஒருவேளை நீங்கள் பாவத்தின் பிடியில் இருப்பீர்களென்றால் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் உங்களை நிச்சயம் விடுதலையாக்கும். இப்பொழுதே உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு தேவனிடத்தில் ஒப்புரவாகிவிடுங்கள்.

நாம் கொடிய காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எவனை விழுங்கலாமோவென்று பிசாசு வகைத்தேடி சுற்றித்திரிகிறான். நம்முடைய பரிசுத்தத்திலிருந்து நாம் தவறி, பாவத்தில் விழ வைப்பதற்கு பல சோதனைகளை நமக்கு நேராக அனுப்பிக் கொண்டிருக்கிறான். ஆனால் நாம் நம்முடைய பரிசுத்தத்தை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொண்டு, இன்னும் பரிசுத்தத்திலும் நீதியிலும் முன்னேறி செல்லுவோம்.

**மாரநாதா! இயேசுகிறிஸ்து சீக்கிரம் வருகிறார்!!**

# நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற சமுதாய பணிகள்:

Regd No: 203/2013 A Registered Charitable Trust











**ஏழை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்**

ஆதரவற்ற ஏழை மாணவர் களுக்கு Back to School என்ற நிகழ்ச்சி மூலமாக புத்தகப்பை மற்றும் கல்விகற்பதற்கு தேவை யான உபகரணங்கள் வழங்கப் பட்டது. சென்னை இராணி அண் ணா நகரில் தினமும் நடத்தப் படும் இலவச டியூசன்க்கு வரும் மாணவர்கள் மற்றும் செங்கல் பட்டில் கே. கே. நகரில் வசிக்கும் மாணவ மாணவியர் களுக்கு வழங்கப்பட்டது. மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்ப தற்காகவழங்கப்பட்ட இந்த உபகரணங்கள் வாங்குவதற்கு தங்கள் உதவிக்கரங்களை நீட்டிய ஒவ்வொருவருக்கும் நன்றி களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு**

நமது நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஒவ்வொரு வாரமும் திங்கள் கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் சென்னை யில் உள்ள முதியோர் இல்லங்களுக்கு சென்று அங்குள்ள முதி யோர்களுக்கு மதிய உணவுகளை வழங்கி வருகிறோம். கடந்த மாதம் புனித தோமையார் பகுதியில் உள்ள சகாயம் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு தேவையான காய்கள் நிறைந்த தரமான நல்ல ஊட்டசத்து மிகுந்த உணவுகள் கொடுக்கப்பட்டது.

**நெசா அற்புத பெட்டகம்**

ஒவ்வொரு மாதமும் ஏழை விதவைகளுக்கு அரிசி, பருப்பு அடங்கிய மளிகைப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 200க்கும் அதிகமானோர் இதன் மூலமாக பயனடைந்து வருகின்றனர். கடந்த மாதம் தாம்பரம் சேலையூர் பகுதியில் உள்ள குடிசைவாழ் மக்களுக்கும் மற்றும் மாதந்தோறும் உதவி செய்து வருகிற கைம்பெண்கள் மற்றும் முதியவர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்த மாபெரும் நற்பணி செய்ய உதாரத்துவ மாய் உதவின ஒவ்வொருவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

உங்கள் பிறந்தநாள் மற்றும் திருமண ஆண்டு நிறைவு விழாவின்போது ஏழை எளியவர் களையும், திக்கற்றவர்களையும் மறந்துவிடாமல் நெசா மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**உங்களுடைய உதாரத்துவமான நன்கொடைகளை கீழ்கண்ட GPay/ Phonepe எண்ணிற்கோ அல்லது வங்கிக்கணக்கிற்கோ அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

**உங்கள் நன்கொடைகளை அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரியுங்கள். உங்களுக்கு இரசீது அனுப்ப உதவியாயிருக்கும். நீங்கள் அனுப்புகிற நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு உண்டு.**











Account Name : Nessa Trust
Banker's Name : HDFC Bank
Account No : 50200002673830
Branch : Kodambakkam
IFSC Code : HDFC0000574

www.nessatrust.org



# இதற்காய் ஜெபிக்கிறீர்களா?

நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன்... எசேக்கியேல் 22:30

## செப்டம்பர் 10
### உலக தற்கொலை தடுப்பு தினம்

- 2017ம் ஆண்டில் 4711 மாணவிகள் தற்கொலை செய்துள்ளனர். ஆனால் 2021ல் இந்த எண்ணிக்கை 5693ஆக உயர்ந்துள்ளது.
- 2021ம் ஆண்டில் 13,000 மாண வர்கள் இந்தியாவில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதாவது தினசரி 35 தற்கொலைகள்.
- கடந்த 2021 கல்வித்துறை அமைச் சகத்தின் அறிக்கையின்படி ஐ.ஐ.டி மற்றும் என்.ஐ.டி போன்ற மத்திய கல்வி நிறுவனங்களில் 122பேர் தற்கொலையினால் மரித்துள்ளனர்.
- இந்தியாவில் மாணவர்கள் தற்கொலை அதிகமாக நடைபெறும் மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது இடம்.
- தற்கொலை எண்ணத்தோடு இருக் கும் மாணவ மாணவிகள் விடுதலை யாக்கப்படவும், இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம். தற்கொலையின் ஆவிகள் கட்டப்பட ஜெபிப்போம்.

## செப்டம்பர் 24
### உலக காதுகேளாதோர் தினம்

- இந்தியாவில் சுமார் 63 மில்லியன் மக்கள் செவி கேட்கும் திறனை இழந்திருக்கின்றனர் என்று கீபிளி புள்ளிவிவரம் சொல்லுகிறது. இது இந்திய மக்கள் தொகையில் 6.3% என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 27,000 குழந்தைகள் காது கேட்காமல் பிறக்கின்றன.
- 2050க்குள் உலகில் 4ல் 1 நபருக்கு காது கேளாமை ஏற்படும் என WHO தெரிவிக்கிறது.
- காது கேட்காதவர்களுக்கு கர்த்தர் பூரண சுகத்தைத் தர ஜெபிப்போம்.
- பிறக்கிற ஒவ்வொரு குழந்தைகளும் குறைபாடுகள் இல்லாமல் பிறக்க ஜெபிப்போம்.
- வயது சென்றதினிமித்தம் ஏற்படும் காது கேளாமை குணமாக ஜெபிப்போம்.

## செப்டம்பர் 29
### உலக இதய தினம்

- ஒவ்வொரு ஆண்டும் 32% இந்தியர்கள் இருதய நோயினால் மரிக்கின்றனர்.
- 2015ம் ஆண்டு மட்டும் சுமார் 21 இலட்சம் பேர் இருதய நோயினால் மரித்துள்ளனர்.
- 5 வயதுகுட்பட்ட ஜனங்களில் 40 % பேர் இருதய நோயினால் பாதிக்கப்பட்படுகின்றனர்.
- இந்தியாவிலுள்ள வாலிபர்கள் அதிகளவில் ஆரோக்கியமில்லாத உணவு பொருட்களை உட்கொள்ளுவதே இருதய நோய்க்கு முக்கிய காரணமாக இருக்கிறது.
- ஜனங்கள் தங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த ஜெபிப்போம்.

## எழுப்புதலில் உங்கள் பங்கு!

*அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே.. கடைசி கால எழுப்புதலுக்காக திருச்சபைகள் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிற இந்த நாட்களில் நமது ரூஹா ஊழியங்கள் மிகத்தீவிரமாக கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவித்து வருகிறது. பரலோகத்தில் செய்யப்படுவது போல 24 மணி நேர துதியும் ஜெபமும் பூமியிலேயும் செய்ய 24 மணி நேர துதி ஜெப எழுப்புதல் மையத்திற்கான இடத்தை வாங்க உங்களுடைய உதாரத்துவமான பொருத்தனை விதையைச் செலுத்துங்கள். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!*

**1 Account Details** வங்கிக்கணக்கு

| | | |
|---|---|---|
| ACC. NAME | RUAH MINISTRIES | RUAH MINISTRIES BUILDING FUND |
| ACC. NUMBER | 05741450000037 | 50200033712782 |
| BANK NAME | HDFC Bank | HDFC BANK |
| BRANCH NAME | Kodambakam | Kodambakkam |
| IFSC CODE | HDFC0000574 | HDFC0000574 |

**2** Google Pay / Phone Pe
**9444150777**

**3 Cheque Favour Name:**
- Ruah Ministies
- Ruah Ministries Building Fund

Scan here to Donate

**4 E.M.O** மணி ஆர்டர்
To Address: Ps. Alwin Thomas
82, Jawaharlal Nehru Salai,
Vadapalani, Chennai - 26, 9884710777

நீங்கள் காணிக்கை அனுப்பிய பிறகு, உங்களது பெயர், முகவரி மற்றும் எந்த ஊழியத்திற்காக நீங்கள் காணிக்கை அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விவரங்களை **9884901777** என்ற எண்ணிற்கு வாட்சப் மூலமாகத் தெரியப்படுத்துங்கள்.

Owned and Published by E.Alwin Thomas No.5, 18th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Printed by T. Simon Peter Vasanth Prints & Packs, No.44, Paarthasaarathi pettai Street, Vellala Teynampet, Chennai - 600 086. Editor E. Alwin Thomas

Registered Newspaper RNI No. TNTAM/2010/36309 | Postel Regd.No. TN/CC(S)DN/411/23-25
Licensed to Post WPP No.TN/PMG(CCR)WPP-585 / 2023-2025 Published on 1st week of Every Month
Posted between 25-31 August 2023 | Posted at RMS Egmore Patrica Channel







உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிகுந்த பிரயோஜனமான தேவ செய்திகள், அபிஷேகத்தில் நடத்தும் ஆராதனை பாடல்கள், வேதாகமத்தைப் பற்றிய ஆழமான ஆராய்ச்சி செய்திகள், சிறுவர்களுக்கான கலக்கல் குட்டீஸ் போன்ற அனைத்து வயது தரப்பினரும் கண்டு களிக்கக்கூடிய நிகழ்ச்சிகளை **உங்கள் ரூஹா டிவியில் காணத் தவறாதீர்கள்!**

**ruah tv**

| CABLE NETWORKS | Channel No |
|---|---|
| SCV | 182 |
| TCCL | 745 |
| JAK | 101 |
| Aristo | 612 |

DIGITAL PLATFORMS: YouTube, Roku TV, amazon fireTV, Jio Fiber Set top box, Google Play, App Store

*If Undelivered please Return to:*

**RUAH SUVASA KATRU**
No. 82, 100 Feet Road,
Vadapalani, Chennai,
Tamil Nadu 600026